தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன் கிழமை, 1980 ஜூலை 16

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்''

இந்த வேலையை இந்த விதத்தினால் இவன் முடித்தல் கூடும் என்பதை ஆராய்ந்து, அறிந்து பிறகு அந்த வேலையை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சித்தாபுதூர் ஆரம்பப்பள்ளிக் கட்டடம்

* வினா எண். 6 திரு. கு. ரமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை நகரம் முதல் வார்டு சித்தாபுதூர் ஆரம்பப் பள்ளிக்கென எட்டு புதிய வகுப்பறைகள் கட்ட சுமார் ஒ[illegible] வருடத்திற்கு முன்பு கல்வி அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்றும் நாளது வரை கட்டடப்பணிகள் மேற்கொள்ளப் படாததற்கான காரணம் யாது?

(ஆ) இதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) சித்தாபுதூர் ஆரம்பப்பள்ளிக்கு கூடுதலாக எட்டு வகுப்பறைகள் கட்ட ரூ. 2,65,000-க்கு மதிப்பீடு தயாரித்து தொழில் நுட்ப அனுமதி கோரப்பட்டது. அவ்வனுமதி பெறுமுன் அகவிலைப்பட்டியல் திருத்தப்பட்டதின் காரணமாக மதிப்பீ[illegible] திருத்தப்பட வேண்டியதாயிற்று. எனவே மதிப்பீடு ரூ. 3,00,00[illegible] என திருத்தியமைக்கப்பட்டு மீண்டும் தொழில் நுட்ப அனுமதியும் நிர்வாக அனுமதியும் பெற நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

(ஆ) மேற்கூறிய அனுமதிகள் பெற்று விரைவில் வகுப்பறைகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த 8 வகுப்பறைகள் கட்டுவதற்கு $1\frac{1}{2}$ வருஷத்திற்கு முன்பே—அதற்குக் குறையாது என்று நினைக்கிறேன்—நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வந்து அஸ்திவாரக்கல் போட்டு ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது அமைச்சர் தன்னுடைய பதிலில் அந்த ஒப்பந்தக்காரர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை, விலைவாசி ஏற்றத்தினால் அதிகப்பட்டிருக்கிறது என்பதனால் திருத்தியமைக்கப்படுவதற்காகக் காலதாமதம் ஆகிறது என்று கூறுகிறார்கள். மறுபடியும் திருத்தி அமைக்கப்பட்டது. மறுபடியும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றவில்லையென்றால், விலைவாசி ஏறிக்கொண்டே தானிருக்கும். விலைவாசி இரும்புக்கு, கல்லுக்கு, சிமெண்டுக்கு ஏறிக்கொண்டுதானிருக்கும். அப்படியானால், அந்தத் திட்டத்தை எப்படி நிறைவேற்றுவது? அதை மாற்றியமைத்திருந்தால் அது இதற்குள் நடந்திருக்க வேண்டாமா? அதற்கு என்ன செய்யப்போகிறீர்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அந்தக் கட்டடத்தைப் பொறுத்த அளவில் 19–6–1978 ஆம் தேதி அன்று அதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ரூ. 2,65,000–க்கு மதிப்பீடுகள் கொடுக்கப்பட்டன. அதற்கு பின்பு—அவைகளை எல்லாம் தயாரித்து—செயல்பட தொடங்கும்போது, மீண்டும் 'எஸ்கலேஷன்' என்ற முறையில் திருத்திய மதிப்பீடுகள் தயார் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு, அது மீண்டும் ரூ. 3 இலட்சமாக மதிப்பீடு செய்யப்பட்டு, அந்த வேலைகள் துவங்குகின்ற நிலையிலே இருக்கின்றன. ஆகவே கண்டிப்பாக இந்த முறை மீண்டும் திருத்தக்கூடிய அளவுக்குப் போகாது என்பதை அவர்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அந்தப் பள்ளிக்கூடம் தமிழ்நாட்டிலேயே அதிகப்படியான குழந்தைகள் படிக்கக்கூடிய ஆரம்பப்பள்ளிக்கூடம். 2,300 குழந்தைகளுக்கு மேல் படிக்கின்றனர் அதனால் குறிப்பிட்ட கால வரையறைக்குள்—8 வகுப்பறைகள் தான்—சாதாரண அறைகள் ஒரு மாதத்திற்குள்ளோ, இரண்டு மாதத்திற்குள்ளோ, அது கட்டி முடித்துத் தரப்படும் என்ற உறுதியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகக் கட்டி முடிக்கப்படும்.

1980 ஜூலை 16]

திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் கூறியது போல, 1978 ஆம் ஆண்டு டெண்டர் விட்டு, மறு எஸ்டிமேட் கேட்டு, ஆய்வு செய்ய இவ்வளவு காலதாமதம் ஆகி இருக்கிறது. அது அங்கு மாத்திரம் ஏற்படவில்லை. தமிழகத்திலே உள்ள அனைத்துப் பொறியாளர்களும் அப்படித் தான் செய்கிறார்கள். எனவே, அதை மாற்றுகிற வகையிலே அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டு, குறிப்பிட்டு, கோடிட்டுச் சொன்னால், நான் விவரமாகப் பதில் சொல்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை பாப்பனாய்க்கன் பாளையத்திலுள்ள பள்ளிக்கு இருக்கிற நிலை, கோவை ஒப்பனக்கார வீதியிலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அந்தக் கட்டடம் இடியும் நிலையிலிருக்கிறது என்பதையும் தெ வித்து, அந்தக் கட்டடத்தைப் புதுப்பிக்கின்ற திட்டம் ஏதாவது உண்டா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மூலக்கேள்வி சித்தாபுதூர் ஆரம்பப்பள்ளியைப் பொறுத்த அளவில் இருந்தாலும், 3 நாட்களுக்கு முன்பாக நான் கோவைக்கு சென்றிருந்தேன். அந்த நிலையில் அங்கே இருக்கக்கூடிய பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் மோசமாக இருக்கிறது என்று சொன்னவுடனே, அதிகாரிகளைக் கூப்பிட்டு, வேலையைத் துவங்கச் சொல்லியிருக்கிறேன். எனவே, நேற்றைக்கே வேலையைத் துவங்கியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அது உடனடியாக கவனிக்கப்படும்.

மேலக்கோட்டையூர் ஒன்றிய மருத்துவமனை.

* வினா எண் 7 திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவில்லிப்புத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம் மேலக் கோட்டையூரில் உள்ள ஒன்றிய மருத்துவமனையை அரசு எடுத்துக்கொள்ளும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இல்லை.